சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. அதை மாற்றி நேரடியாக கூட்டுறவு நூற்பாலையிலிருந்து இந்த நூலை நெசவாளர் சங்கங்களுக்கு அளிப்பதன் மூலம் குறைந்த விலையில் கிடைக்க வழியிருப்பதால், நேரடியாக நூற்பாலைகள் நூலை விநியோகிக்கும் திட்டத்தை அரசு அமல் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்பாலைகள் உற்பத்தி செய்கிற நூல்களை, நேரடியாக நெசவாளர்களுக்குக் கொடுத்து வந்தது சரியான முறை இல்லையென்பதால், தனியார் அவர்களோடு போட்டி போடக்கூடிய சூழ்நிலை இருப்பதால், அதைத் தலைமைச் சங்கமே கொள்முதல் செய்து, 21 சங்கங்கள் வாயிலாக 1,052 பிரதம சங்கங்களுக்கு—அதில் உள்ள நெசவாளர் களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மற்ற வெளியிடங்களில் கொடுப்பதைவிட, ரூ 3, ரூ 4 குறைவாகவே பிரதம சங்கங்களில் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோபால் : தலைவர் அவர்களே, சில கிராமங்களிலே கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருந்தும் அங்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத நிலைமை இருந்து வருகிறது. அப்படிப்பட்ட கிராமங்களில் உள்ள நெசவாளர்களுக்கு மலிவு விலையில் நூல் கிடைக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் இயங்கி வருகின்ற தனியார் நெசவாளர்களுக்கும் மற்றைய நெசவாளர்களுக்கும் சங்கங்களில் இயங்கி வருகின்ற நெசவாளர்களுக்குக் கிடைக்கின்ற நியாய விலையில் கிடைப்பதைப் போன்ற ஏற்பாட்டை அரசு செய்து வருகிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

பெரியார் மாவட்டத்தில் சாயம் தயாரிக்கும் தொழிற்சாலை.

*வினா எண் 99—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு கைத்தறி—கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

பெரியார் மாவட்டத்தில் மத்திய அரசுடன் சேர்ந்து சாயம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றுபுதிதாகஆரம்பிக்கும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பெரியார் மாவட்டத்தில் சாயம் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது மஞ்சளின் விலை குறைவாக இருப்பதால் மஞ்சளைப் பயன்படுத்தி சாயத் தொழிற்சாலை வைப்பதற்கு. . .

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மஞ்சளுக்கும் சாயத்திற்கும் என்ன சம்பந்தம்? சாயம் பம்பாயிலிருந்து வருகிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: சாயப்பொருள்களின் மூலப்பொருள் மஞ்சள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கல்கத்தவுக்குப் போகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது இல்லையென்றாலும் வருகிற ஆண்டுகளிலாவது அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட மாவட்டத்தில் இப்பொழுது இல்லையென்றுதான் சொல்லியிருக்கிறோம். தேவைப்பட்டால் கவனிப்போம். ஏனெனில் வெளி மாநிலங்களிலிருந்து நாம் வாங்கி வருகிறபடியால் விலை அதிகமாக இருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்திலே கடலூரில் 'வானவில்' சாயத் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு ஆவன செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் கோவை மாவட்டத்தில் பஞ்சாலைகள் அதிகமாக இருக்கிற காரணத்தால் உற்பத்தியாகிற நூலை வெளி மாநிலங்களுக்கு அனுப்பி சாயம் தயாரிக்கிற சூழ்நிலையிருக்கிற காரணத்தால், கோவை மாவட்டத்தில் சாயத் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு மாவட்டத்திலும் கேட்பார்கள். அடுத்து, திரு. வெள்ளைச்சாமி.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தற்பொழுது பெரியார் மாவட்டத்தில் துவங்க உத்தேசம் இல்லையென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வேறு எங்காவது துவங்க உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வினா எண். 100.

ஒசூர் கால்நடைப் பண்ணை.

*வினா எண் 100—திரு. டி. வேங்கட்டரெட்டி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒசூர் கால்நடைப் பண்ணையில் செயல்படுத்தப்படவுள்ள இந்தியா–பிரிட்டன் திட்டத்தின் கீழ் வரும் புதிய திட்டத்திற்கு அரசு ஏற்பளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?